# தேவகோட்டை நகராட்சி

தேவகோட்டை நகராட்சி வளாகத்தில் சாதாரணக்கூட்டம் தனிஅலுவலரால் 29.01.2021ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு கூட்டம் நடைபெறவுள்ளது. அவ்வமயம் கீழ்கண்ட பொருட்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**பொருள்: 03**

தேவகோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளிள் உள்ள முடித்திருத்தம் / அழகுநிலையம் / ஸ்பா/ மஜாஜ நிலையம் நடத்துவோர்கள் நகராட்சியில் உரிமம் பெற 2018 –ம் ஆண்டின் தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 249 மற்றும் தமிழ்நாடு சட்டம் v/ 1920 - ன்படி உரிமம் பெற நாளிதழில் செய்தி வெளியீடு செய்ய அறிவுறுத்தியதின் அடிப்படையில் தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்ததின் வகையில் உரிய பட்டியல் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற பட்டியலின் படி ரூ. 11227/– மட்டும் தினத்தந்தி நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவீனத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் செலவு மேற்கொள்ள அனுமதிக்கலாம்

**தீர்மான எண்: 03**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்:04**

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் – 12 விநாயாகபுரம் மற்றும் வார்டு எண் – 16, வெள்ளை ஊரணி மேற்கு குறுக்கு தெரு உள்ளது. இத்தெருவில் உள்ள சாலைகள் மிகவும் பள்ளம்மேடாக உள்ளதால் மழைக் காலங்களில் மழை நீர் தேங்கி போக்குவரத்திற்கு சிரமமாக உள்ளது. மேலும் மழைநீர் தேங்குவதால் கொசுக்கள் உற்பத்தியாகி சுகாதார கேடு விளைவிக்க வாய்ப்புகள் உள்ளது. எனவே மேற்கண்ட சாலைகளை பேவர்பிளாக் சாலைகளாக அமைக்க தயார் செய்த மதீப்பிட்டு தொகை ரூ.9.95 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

அ) பணியின் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணிகளுக்கான செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 04**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்:05**

தேவகோட்டை நகராட்சியில் பொதுநிதி 2020-2021-ன் கீழ் மன்றத்தால் நிர்வாக அனுமதி பெறப்பட்ட கீழ்கண்ட பணிகளுக்கு **21.01.2021** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள் பொது ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ (லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் மதிப்பீட்டை விட |
|---|---|---|---|---|
| 1 | தேவகோட்டை நகராட்சிக்கு உட்பட்ட பவானியார் குளக்கால் தெரு வார்டு எண்:17 மற்றும் பெத்தான்கொல்லை தெரு வார்டு எண்: 25 சிறு பாலங்கள் அமைத்தல் பணி. | **2.50** | 1) M/S.Arul Computer | 0.16 % குறைவு |
| | | | 2) ) M/S.Karai Computer | 1.35 % அதிகம் |

அலுவலக குறிப்பு –

பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் மேற்கண்ட விபரப்படி மதிப்பீட்டைவிட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**தீர்மான எண்: 05**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்:06**

இயக்குநர், தமிழ்நாடு நகரியியல் பயிற்சி நிறுவனம், கோயம்பத்துார் அவர்களின் ந.க.எண்.**281/2020**/அ**3**,நாள் **25.01.2021**ம் தேதிய கடிதத்தில் நகராட்சி பணிபுரியும் இளநிலை உதவியாளர்/வருவாய் உதவியாளர்களுக்கான விரிவாக்கப் பயிற்சி (Comprehensive Training Course Batch - 4) 01.02.2021 முதல் **26.02.2021** வரை நடத்தப்படவுள்ளது எனவும் இப்பயிற்சியில் கலந்து கொள்ள தங்கள் நகராட்சியிலிருந்து இணைப்பில் குறிப்பிட்டுள்ளவாறு இளநிலை உதவியாளர் / வருவாய் உதவியாளர்களை பயிற்சி நிறுவனத்திற்கு அனுப்பிவைக்கவும், மேற்படி பயிற்சியில் பங்கேற்பவர்களுக்கு உணவு மற்றும் தங்கும் வசதிகள் இப்பயிற்சி நிறுவனத்திலேயே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால், அதற்குரிய கட்டணம் ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.**1000/–** (Revised rate with effect from 1.4.2018) வீதம் **20** நாட்களுக்கு மொத்தம் ரூ.**20000 /–** (ரூபாயில் இருபதாயிரம் மட்டும்) தமிழ்நாடு நகரியியல் பயிற்சி நிறுவனம் என்ற பெயரில் கோயம்புத்துாரில் செலுத்தத்தக்க கேட்பு வரைவோலையாக (Demand Draft) அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி ரூ.**20000/–**க்கான கேட்பு வரைவோலை தமிழ்நாடு நகரியியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்துருக்குஅனுப்ப வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம். அவசர அவசியம் கருதி தொகை ரூ.20,000/–ஐ வழங்க முன்அனுமதி வழங்கலாம்.

<u>**தீர்மான எண்: 06**</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**(ஒப்பம்)ப.அய்யனார்**

**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்(பொ)**